THE

Greatest Work in the World

OR

The Way to Win Men

979
1919

அதி மகத்தான வேலை

அதாவது

ஆத்துமாதாய நெறி

		பக்கம்
I.	புது ஜீவியம் தொடங்கின வகை	4
II.	மூன்மாதிரியான சம்பாஷணை	5
III.	நமக்கு மகா மாதிரியானவர்	7
IV.	நமது உபாத்தியாயர்	8
V.	நமது உத்தரவாதக் கட்டளை	9
VI.	நமக்கு இடையூறுனவை	10
VII.	நமது சகாயர்	11
VIII.	பிரபோதம்	12
IX.	பாடானுபந்தம்	16

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD CALCUTTA RANGOON COLOMBO

1919

368
230

முகவுரை

நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் தற்காலம் நமக்கு அத்தியந்த அவசியமான தேவை என்ன? பூர்வீகமிருந்த திருவடியார்கள் செய்த கலப்பற்ற சாதாரண ஜீவியநிலைமைக்குத் திரும்புவதே. அவர்கள் கிறிஸ்துவுடன் அனுதினமும் நெருங்கிச் சகவாசஞ் செய்ததால் சக்தியுள்ளதும் மாட்சிமையுடையதுமான தடுக்கப்படாத அனுபவத்தை அடைந்தார்கள். அந்த அனுபவசக்தியானது அவர்களுக்குள்ளிருந்து பொங்கி பிரவாகித்து மற்றவர்களுக்குள்ளும் பாய்ந்து பெருகிற்று. நமது கர்த்தர் தாம் மூன்பன்னிருவரை அழைத்து அவர்கள் தம்முடன் இருக்கவும் தாம் அவர்களைக்கொண்டு மற்றவர்களை மீட்கவும் அனுப்பியவண்ணமாக இன்று நம்மையும் அழைக்கிறார். நாம்முக்கியமாய் தர்க்கவாதத்திலும் சாதாரிய உபந்நியாசத்திலும் நீண்ட பிரசங்கங்களிலும் மனிதரை கவரத்தேடாமல் ஆளாளாக நெருப்பங்கி பழகுவதால் அவர்களை ஆதாயப்படுத்தவேண்டும். நாம் ஒப்பாசாரமும் கும்பல்கோஷ்டமும் அனலற்றதுமான நிலைமைக்குட்படும் பட்சத்தில், மனுஷீக ஏற்பாட்டையும் கும்புக்கட்டுகளையும் துறந்து தனித்தாள் வேலைக்குத் திரும்பவேண்டியது. சபையின் ஊழியத்தின் மட்டுமிஞ்சியபாகத்தை நமது பிரதி ஆட்கள், குருக்கள், பிரசங்கிகள் வசம் விட்டுப்போட்டு நாம் சும்மா இருக்கிறோமல்லவா? இன்றைக்கும் கிறிஸ்துவானவர் 'நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்பதை நம் ஒவ்வொருவருக்கும் நினைப்பூட்டுகிறார். உண்மையுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவ ஊழியனே. நாம் சாதாரணமான தனித்தாள் வேலைக்குத் திரும்புவோமாக. இதினாலேயே ஆதித்தொண்டர்கள் தங்கள் சிநேகிதர்களையும் தங்களுக்கு எதிர்ப்பட்டவர்களையும் ஒவ்வொருவராக இயேசுவண்டை அழைத்து வந்துவிட, இவர்கள் கிறிஸ்துவோடே இணைக்கப்பட்டு ஜீவன் அடைந்தார்கள்.

இந்தப் பாடங்கள் தனித்தாள் ஊழியத்தைப்பற்றி ஏழு காரியங்களை தொட்டுக்காட்டும்படி மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. முதல் முதலாய் நாம் அறியவேண்டியது யாதெனில், இந்த வேலையை நாம் இயேசுவுடன் நெருங்கிப் புழங்கி அவரது அன்பையும் ஜீவியத்தையும் கிரகித்துக்கொண்டு மற்றவர்களுக்குப் புதியஜீவியத்தைப் பகர்ந்து கொடுப்பதால் மாத்திரம் செய்யமுடியுமேயன்றி சட்டதிட்ட கட்டுமானத்தால் செய்ய முடியாதென்பதே. ஆதிச்சீடர்கள் தாங்கள்

ஞானிகள் ஆரும்வரைக்கும் காத்திருக்கவில்லை; அவர்கள் கிறிஸ்து வுடன் சம்பந்தப்பட்ட அதே தேதிமுதல் பிறரை ஆவலுடன் தேடி அவரிடம் அழைத்துவந்தார்கள். இன்றைக்கே நாமும் தவக்குவோ மாக. எல்லாம் இப்போதே ஆயத்தமாயிருக்கிறது; தேவனும் தயா ராய் இருக்கிறார். நம்மைச்சூழ இருக்கும் கிராளான ஆத்துமாக்கள் பாவத்திலும் பாட்டிலும், தரித்திரத்திலும் இருதய பசியிலும் எங்கிக் கொண்டிருக்கின்றன. 'மனிதர் தேவை' என்பதே இக்தர்லத்தின் கூக்குரல். நாம் ஏன் சோம்பியிருக்கவேண்டும்? இன்றைக்கே அவருடைய கிராட்சத்தோட்டத்தில் வேலைசெய்யப் புறப்படுவோ மாக. நமது ஏக நோக்கமும் பொருளும் முடிவும் வேலைசெய்வதே. அதற்கப்புறம் நாம் தொழில்முறைகளைப் படிக்கலாம், ஒரு வேலை யைப்பற்றிக் கற்றுக்கொள்வது அவ்வேலையைச் செய்வதிலேயே யன்றி வேறுவகையால் அல்ல.

I. புது ஜீவியம் தொடங்கின வகை

முதல் ஐந்து சீஷர்கள் அழைக்கப்பட்டது. யோ. 1 : 6, 12–14, 18, 35–51.

கிறிஸ்துவானவர் என்ன நோக்கமாக வந்தார்? வ. 11, 12, 18.

ஸ்நானக யோவான் என்ன நோக்கமாக வந்தான்? வ. 6.

முதல் ஐந்து சீஷர்களையும் ஒருவரொருவராய் அவரிடம் வரப் பண்ணினதென்ன?

அந்திரேயா, பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் தம்முடன் சகவாச முற்ற இம்மனிதர் ஒவ்வொருவரிலும் இயேசு செலுத்திய செல்வாக் கென்ன?

அவ்வொவ்வொருவர் ஜீவியத்திலுண்டான பலனென்ன? எனது ஜீவியத்திலுண்டாயிருக்கிற பலனென்ன?

கவனிக்க. வானராஜ்யத்தின் துவக்கமும் பூமியில் கிறிஸ்து புரிந்த வேலையின் துவக்கமும் தனித்தாள் வேலையே. அவர் தமது மூவுப்பரசங்கத்தைப் பண்ணுமுன்னமும், தமது முதலற்புதத்தைச் செய்யுமுன்னமுமே, வழங்கப்பட்ட ஒரே முறை ஊழியனுடைய கலப்பற்ற தற்சாட்சியும் இயேசுவுடன் புதிய சீஷன் கொண்ட சக வாசமுமே. இந்த சகவாசப் பலனே இயேசுகிறிஸ்துவுடன் பலத்த சம்பந்தத்தின் மூலமாயுண்டான ஜீவியமானது.

ஒவ்வொரு மனிதனிலும் இந்தப் புதுஜீவியமானது எப்படித் துவங்கினதென்பதை நாம் படிக்கும்போதே, உண்மையான கிறிஸ் தவனென்றால் என்னவென்றும் கேட்போமாக.

இவனுக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள சம்பந்தமென்ன? இவனுக் கும் தேவனுக்கும் என்ன சம்பந்தமிருகிறது? தான் தனக்கும், தன் னுடன்மனிதருக்கும் தனக்குமுள்ள சம்பந்தமென்ன?

ஆவியில் ஒவ்வொருவனும் எப்படிக் கிறிஸ்துவுக்குச் சீடரா யினன்? [illegible] முன்னே எவ்வளவு கீலையறிவும் விசுவாச மும் அவசியமாயிருந்தது?

கிறிஸ்தவன் [illegible] கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவ னென்று லக்ஷணம் கூறுவோமா? அவன் எவ்வளவு சொற்ப அறி வும் நம்பிக்கையுமுள்ளவனாயிருந்தபோதிலும், தான் கிறிஸ்துவில் கண்டுகொண்ட [illegible] கருத்தகளுக்கும் இணங்கிப் பிழைப்பவனே கிறிஸ்தவனாயிருக்கிறானல்லவா?

2.2.45

ஒருவன் தனக்கும் தேவனுக்கும், தான் தனக்கும், தனக்கும் பிறர்க்குமுள்ள மூன்று மகத்தான ஜீவியசம்பந்தங்கள் விஷயமாய்க் கிறிஸ்துவை யறிந்துகொள்ளத் தொடரும்போது, கிறிஸ்துவின்மூல மாய்த் தேவனோடு உக்கியப்படும் ஜீவியத்தைத் தேடிக் குணத்திலும் பிறர்க்கு ஊழியம்செய்வதிலும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்று கிறவனே கிறிஸ்தவன் என்பதைக் கண்டுபிடிப்பான்.

நான் மெய்யான கிறிஸ்தவன்தானா? மனிதர்கள் இந்தப் புதிய ஜீவியத்தையும் அதன் அனுபவவிருத்தியையும் பரீட்சித்தறியும்படி அவர்களைக் கிறிஸ்துவண்டைக்கு நடத்திக்கொண்டு வரத் தேடு கிறேனா?

II. முன்மாதிரியான சம்பாஷணை

இயேசுவும் கிணற்றருங்கரைப் பெண்ணும். யோ. 4: 1–42.

முந்தின பாடத்தில் முதலாந்து சீஷர்கள் தனிச்சம்பாஷணையால் ஆதாயப்படுத்தப்பட்டதெப்படி யென்பதைப் பார்த்தோம். இங்கே நாமொரு முன்மாதிரிச் சம்பாஷணையையும், கிறிஸ்துவானவர் ஒரு தனியாளோடு எப்படி நடந்துகொண்டார் என்பதையும் பார்க்கி றோம். 8, 10, 16 வசனங்களைப் பார். இயேசுவானவர் ஒரு ஆளை ஆதாயப்படுத்தும்படி எந்த மூன்று வகையாய்த் தமது சம்பாஷணை யைத் துவங்கினாரென்பதை நீயே கண்டுபிடி.

14–21, 24 வசனங்களை வாசித்துப்பார். சம்பாஷணையைத் துவங் கினது யாரென்றுன்னையே கேள்—கிறிஸ்துவா? அந்த ஸ்திரீயா?

சம்பாஷணை முழுவதின் நோக்கமென்ன?

அவளுக்கிருந்த தேவையை எப்படித் திருப்திசெய்தார்?

25, 26, 29, 39, 42 வசனங்களை வாசித்து, கிறிஸ்து எவ்வித மாக இச்சம்பாஷணையைத் தெரிந்தகொண்டாரென்றும், என்ன பலன் விளைந்ததென்றும் உன்னையே வினவு.

இந்தச் சாதாரண திருஷ்டாந்தமடங்கிய சம்பாஷணையினின்று நாம் பிறரோடு சம்பாஷணை செய்வதற்குதவியான குறிப்புகளைக் கண்டுபிடிக்கக்கூடாதா?

(A) ஒரு சம்பாஷணையைத் துவங்குவதெப்படி?

1. வசனம் 8. இருவருக்கும் பிரியமான காரியத்தைத் தொடு. அதாவது அவனது நிலைமையை யறிந்து அவனுக்கும் உனக்கும் கரி சனையாயுள்ள ஒரு காரியத்தைத் தொட்டுப் பேசு. இயேசுவான வருக்கும் அந்த மாதிக்கும் பொதுவான காரியம் அவ்விருவருக்குந் தேவையாயிருந்த தண்ணீரே.

22485

2. வசனம் 10. ஒரு மனுஷனுக்கு நீ நன்குதவத் தேடுகையில் அவனுக்கவசியமான தேவையைப்பற்றிய உணர்ச்சியை யெழுப்பி விடு. கிறிஸ்து அந்த ஸ்திரீயை இணற்றுநீரைப்பற்றிய எண்ணத்திலிருந்து தேவனுடைய ஈவைப்பற்றிய எண்ணத்துக் கிழுத்து விடுகிறார்.

3. வசனம் 16. ஒரு மனுஷனுக்கிருக்கும் உள்ளபடியான தடை அல்லது அவனை நெருங்கியிருக்கும் பாவமென்ன வென்பதைக் கண்டுபிடி. அநேக மனுஷருக்கிருக்கும் தடை, அறிவைப் பற்றியதல்ல, நடக்கையைப்பற்றிய யேயப்பாடே. இயேசுவானவர் அடிக்கடி கையாடின பரீட்சையால் அவன் தன்னைப் பரீட்சிக்கும்படி செய். (a) நீ யதார்த்த குணஞ? லூக். 16 : 11; (b) நீ சுத்தவானஞ? மத். 5 : 29; (c) நீ யுன்னை கையளித்திருக்கிறாயா? லூக். 14: 33; (d) நீ அன்புடையவனஞ? யோ. 15 : 12.

(B) ஒரு சம்பாஷணையை நடைபெறச் செய்வதெப்படி?

1. தேவ ஒத்தாசையைக் கொண்டு நீயே சம்பாஷணையை நடத்து. அது உன் வசத்திலேயே யிருக்கட்டும். நப்போலியன் எப்போதும் தன் யுத்தகளத்தைத் தானே தெரிந்துகொள்வான். வ்வோக் என்ற தளகர்த்தர் தன் சேனைகளைத் தானே சண்டை தவக்க ஏவுவார். அவர்களே முன்னேறித் தாக்கி விடாப்பிடியாய்த் தொடர உற்சாகப்படுத்துவார். சமாரியஸ்திரீ முக்கியமற்ற காரியங்களில் தலையிடுகிறாள். 'இந்த மலையிலே' 'நீர் யூதனுயிருக்க சமாரியளிடத்தில்' முதலியன. முக்கியமல்லாதவற்றை யகற்றும் வழி, கிறிஸ்து வாகிய ஒரே முக்கிய பொருளை முன்னிறுத்திக்கொள்வதே.

2. தர்க்கத்தில் ஜெயிப்பதற்கல்ல, ஒரு ஆத்துமாவை ஆதாயப்படுத்தும் ஒரேநோக்கத்தை மனதில்வைத்து சம்பாஷணையை நடத்து.

3. கிறிஸ்துவின் பூரண சுவிசேஷத்தைக்கொண்டு அம்மனுஷனுடைய மெய்யான தேவையைத் திருப்திசெய். இந்தப் பேதையான ஸ்திரீக்கு கிறிஸ்து எதைக்கொடுக்க எத்தனிக்கிறார் என்பதைக் கவனி. 14 வ.

(C) ஒரு சம்பாஷணையை முடிப்பதெப்படி?

1. ஆளைக் கிறிஸ்துவுக்குமுன் முகமுகமாய் நிறுத்து. ('நானே அவர்' 26 வ.)

2. அவன் நற்தீர்மானம் பண்ணவும் அதன்படி நடக்கவும் செய். 29-39 வ.

3. ஊழியம் செய்வதாகிய புதிய ஜீவியத்தை யவன் தவங்கும்படி பண்ணு. (42 வ.) புதிதாய்க் குணப்பட்டவனைத் தவக்கமுதலே வேதாராய்ச்சி, ஜெபம், ஊழியம் என்பவற்றின் கருத்தை யறிந்து கொள்ளப் படிப்பி.

III. நமக்கு மகா மாதிரியானவர்

கிறிஸ்துவுக்கிருந்த உறுதிப்பத்திரங்களும், நம்முடையவும். லூக். 4: 18; 7: 19-22; 9: 1, 6; 10: 1, 2, 17-21.

கிறிஸ்துவினுடைய வேலை யொழுங்கென்ன? லூக் 4: 18.

இன்றைக்கவருடைய வேலை யொழுங்கென்ன?

அவரது வேலையொழுங்கு எவ்வளவதூரம் என்னுடையதாகும்?

கிறிஸ்துவுக்குரிய உறுதிசாதனங்களெவை? லூக். 7: 22.

அவரது தொண்டர்களின் உறுதிசாதனங்களெவை? லூக். 9: 6; 10: 17; அப். 2: 38, 47; 3: 13; 21: 19.

அப்போதிருந்த தோல்விக்கு முக்கிய காரணமெது? இப்போது முக்கிய காரணமெது? லூக். 9: 37-43. நம்மைச் சூழவிருக்கிற ஜனங்களெல்லாம் ஆவிக்குரிய விஷயத்தில் குருடராயும், கொண்டிகளாயும், அசுத்தராயும், செவிடராயும், ஏழைகளாயும், மரித்தவர்களாயும் இருக்கிறார்கள்.

ஜனங்களை நாம் அவரிடத்தில் அழைத்துவரும்படி நமக்கு வல்லமை யருளியிருக்கிறாரா? அவர் இன்றைக்கும் மனிதரைக் குணமாக்க முடியுமா?

நான்கு சுவிசேஷங்களிலும் கூறியிருக்கிறபடி இயேசுவானவருடைய ஜீவியத்தின் பெரும்பாகத்தை நாம் கவனத்தோடு ஆராய்ச்சி செய்தால் அவரது தனித்தாள் சம்பாஷணைகளையும் அ[illegible]ளாக ஆரோக்கியமளித்துக் குணப்படுத்தின சம்பவங்களையுமே காணலாம். அல்லது பன்னிரு அப்போஸ்தலருக்கும் சிறு கூட்டமான சீஷர்களுக்கும் போதித்ததைப் பார்க்கலாம்.

அவர் எப்போது இந்த வேலையைச் செய்கிறார்? அவர் முற்றுமாகத் தன்னை மறந்தவராய் நேரத்தோடும் நேரங்கடந்தும், பகலிலும் இரவிலும், வாரநாட்களிலும் ஓய்வுநாட்களிலும், சமயம் வாய்த்த போதும் வாய்க்காதபோதும் மனிதரை இரட்சிக்கும்படித் தமது ஜீவனையே தாரைவார்த்துவிட்டாரென்பதை நாம் காண்போம்.

அவர் எங்கே வேலைசெய்தார்? எருசலேமிலும், கலிலேயாவிலும், சமாரியாவிலும், பெனிக்கே நாட்டிலும், கோலிலியும், ஜெபாலயங்களிலும், நாட்டிலும், நகரிலும், வீட்டிலும், வெளி சந்திகளிலும், மலைகளருகிலும், கடலோரங்களிலும், தனியிடத்திலும், கூட்டத்திலும், தச்சுவாடிமுதல் சிலுவைபரியந்தம் எங்கும் எல்லாவிடத்திலும் தமது பிதாவின் அலுவலாயிருந்தார்.

எப்படி வேலைசெய்கிறார்? அந்தரங்கத் தனிச்சம்பாஷணையாகவும் பகிரங்கப் பொதுப்பிரசங்கமாகவும் போதிப்பதோ, உபந்தியாசிப்

பதோ, குணமாக்குவதோ முதலியவாறுய் வேலைசெய்கிறார். அவர் மனிதரைத்தேடிச் சரீரத்திலும் மனதிலும் ஆத்துமாவிலும் ஆரோக்கியமாக்கி மற்றவர்களையும் அழைத்துவரும்படி யவர்களை யனுப்புகிறார்.

அவர் யாரிடத்தில் பேசுகிறார்? உயர்ந்தோர் தாழ்ந்தோர், சீமான்கள் ஏழைகள், ஞானிகள் பேதைகள், சிநேகிதர் அன்னியர், ஆண்கள் பெண்கள், பரிசேயர் ஆயக்காரர், நிக்கொதேமுவைப் போன்ற அதிகாரி, கிணற்றருங்கரைப் பெண்போன்ற பேதை, ஊசுவரிய வாலிபன், சிலுவைமேல் திருடன், நியாயவாதிகள், கைதிகள், வேதபாரகர், வேசிகள், யூதர், புறஜாதியாராதியான யாவரோடும் பேசினார்.

'அவரடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றும்படி உங்களுக்கு மாதிரியை வைத்தார்.' 1 பே. 2 : 21.

'என்னைப் பின்பற்றுங்கள், நானுங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்.' மாற். 1 : 17.

IV. நமது உபாத்தியாயர்

தனித்தாள் சுவிசேஷவேலையின் அவசியம். மத். 5 : 13-16; மாற். 7 : 21, 22; லூக். 15.

யேசுவானவர், 'தமது ஜனங்களின் பாவங்களினின்று அவர்களை இரட்சிக்கிறார்' என்பது உண்மைதானே?

தனித்தாள் வேலையைப்பற்றி நமது உத்தரவாதத்தைக் கவனிப்போமாக. மத். 5 : 13-16.

'உப்பு', 'வெளிச்சம்', 'மலைமேலிருக்கிற பட்டணம்' என்பதின் விஷேடனமென்ன?

மனிதருடைய தேவையைப்பற்றிக் கிறிஸ்து போதித்ததென்ன? அல்லது ஒரு ஞானவைத்தியனுகப் புலப்படுத்திய நாத்தும நோயின் கூறுபாடுகளென்ன? மாற். 7 : 21, 22. இந்த பயங்கரமான அட்டவணையைச் சுருக்கமான சாதாரண வார்த்தைகளில் சொன்னால் இப்பாவங்களில் எத்தனை யுன் ஜீவியத்தில் காணப்படும்?—(1) அசுத்தம், (2) தற்பொழிவு, (3) பகை, (4) உண்மைப்பாதகம், (5) பெருமை.

நாம் மனிதரை யடுப்பதில் தேவ உதவியைக் கவனிப்போமாக. லூக். 15. தப்பிப்போன ஆடு, காணமற்போன காசு, தவறிப்போன மகன் ஆகிய இம்மூன்றுவமைகளைக் கவனிக்கக்கடவோம். 'தப்பிப் போன', 'தவறிப்போன', 'இடிந்துபோன' என்றால் அர்த்தமென்ன? நம்மைச் சூழவிருக்கிற மனிதரின் நிலமையென்ன? அவர்கள் தங்களைச் சொந்தமாகக்கொண்ட ஏகனைவிட்டு அப்பாலே சென்றிருக்கிறார்களே. இடையனும் ஸ்திரீயாலும் குறிக்கப்பட்டபடி இவ்விஷயத்தில் தேவனுடைய தன்மைகளென்ன? இழந்துபோனதை எவ்வளவுகாலந் தேடுகிறார்? 4, 8 வ.

தகப்பனிடம் திரும்பி வந்தபோது மகன் பெற்றுக்கொண்ட வரவேற்கை யென்ன? கெட்டகுமாரன் தவறிப்போனதிலும் திரும்ப வந்ததிலுமிருந்த படிகள் வரிசையைக் கவனி. இன்றைக்கும் இப் படிப்பட்ட ஆட்கள் நம்மைச் சூழவிருக்கிறார்களா?

இழந்துபோனவர்களாய் நம்மைச் சூழவிருக்கிற ஜனங்களுக்காக நாம் என்னசெய்யவேண்டும்?

'எப்படிப் பேசுவோமென்றும் என்னத்தைப் பேசுவோமென் றும் கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கருளப்படும். பேசுகிறவர்கள் நீங்களல்ல உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.' மத். 10 : 19, 20.

V. நமது உத்தரவாதக் கட்டளை

கிறிஸ்துவின் கடைசிக் கட்டளை. யோ. 20 : 20, 21; 21 : 15–17; மத். 28 : 18, 20. லூக். 24 : 24–49; அப். 1 : 1–8.

கிறிஸ்துவானவர் அனுப்பப்பட்டதேன்? நாம் என்னசெய்ய அனுப்பப்பட்டிருக்கிறோம்? யோ. 20 : 21; 14 : 12.

அன்புக்கு மெய்யான அறிகுறியென்ன? உண்மையான ஊழி யத்தின் நோக்கமென்ன? யோ. 2 : 15–18.

அவருடைய ஆடுகளை மேய்க்கத்தக்கதாக அவர்மேல் நமக்குப் போதுமான அன்புண்டா?

எந்த அதிகாரத்தின்மேல் நமது உத்தரவாதம் சார்ந்திருக்கிறது: மத். 28 : 18–20.

நாம் என்னசெய்யும்படி யதிகாரம்பெற்றோம்? நாமதைச் செய் கிறோமா?

'இயேசு துவங்கினார்.' அப். 1 : 1. எதைத் துவங்கினார்?

நாம் தொடர்ந்தேற்றிப் போகிறதென்ன?

தனித்தாள் வேலைக்கு நமக்கு வேண்டிய பரிபக்குவங்களென்ன? அதைப்பற்றிய வாக்குத்தத்தமென்ன? அப். 1 : 4, 8.

மெய்ச்சாட்சியின் லக்ஷணங்களென்ன? அப். 4 : 13, 20.

பெந்தேகோஸ்து நாளில் பிதாவின் வாக்குத்தத்தம் எப்படி நிறை வேறினது? அப். 1 : 4, 8; 2 : 1–4.

பெந்தேகோஸ்துவின் எந்தப்பக்கத்தில் நானிருக்கிறேன்? நான் பரிசுத்தாவியை எப்படிப் பெற்றுக்கொள்ளலாம்? லூக். 11 : 13. இன்றைக்கு நாளொரு சாட்சியாக இயேசு கொடுத்த நான்மடிக்கட் டளையைக் கொண்டு செலுத்தவேனு?

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதே, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதி களையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்தாவியினுமத்திலே அவர் களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்குபதேசம்பண் ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.

VI. நமக்கு இடையூறானவை

தனித்தாள் வேலைக்குத் தடைகள். அப். 5:1–5; 8: 4–8, 18–23.

நமக்குள்ளிருக்கும் தடைகள்

அந்தரங்கபாவம். அனனியாவுடைய இருவிதமான பாவமென்ன? அப். 5: 1. நாளைரு ஜீவனுள்ள சாட்சியாயும் மனிதரை யாதாயம் பண்ணுகிறவனுயு மிருக்கிறேனு? அப்படிக்கில்லையென்றால் காரணமென்ன?

நீ மனிதரை யாதாயப்படுத்துகிறவனுய் இராதிருந்தால் அதற்குக் காரணம் ஒருவேளை பின்வரும் மூன்று முகாந்தரங்களில் ஒன்றாயிருக்கவேண்டும்: அந்தரங்க பாவம், மனிதர் பயம், அல்லது பூரண ஜீவியக்குறைவு. அனனியா புதியஜீவியத்தை ஆசித்தான். இருமன மற்ற சிந்தையே அதைக் கொள்ளுங் கிரயமாகவேண்டியிருந்தது. லூக் 14: 33. அவனுடைய பாவம் உண்மைதப்பாலும் மாய்மாலத்தாலும் மூடப்பட்ட தற்பொழிவாயிருந்தது. எனக்குப் புதுஜீவியம் வேண்டும். அதற்குக் கிரயம் செலுத்தச் சித்தமாயிருக்கிறேனு? பின் வருவனவற்றில் ஒருபாகத்தை மறைத்துவைத்திருக்கிறேனு?—என் இருதயம், என் நேரம், என் ஒழுங்குகள், என் ஆவல், என் பக்தி, என் ஊழியம். அப்படிக்கில்லையென்றால் இயேசுவினிடத்தில் மனிதரை யழைத்துவரும் சாதாரண வித்தையை நீ இன்னும் கற்றுக் கொண்டதில்லையென்னும் சத்தியமே உனது பிழையாயிருக்கலாம்.

மற்றவர்களுக்குள்ளிருக்கும் தடைகள்

சீமோன் செய்த மும்மடியான பிழையென்ன? அப். 8: 4–8, 18–23.

மெய்க்கிறிஸ்தவனுக்கும் போக்கிறிஸ்தவனுக்குமுள்ள அடையாளங்களென்ன?

சீமோன் மெய்க்கிறிஸ்தவனுவதற்கிருக்கவேண்டியிருந்த சங்கேதமென்ன? சீமோன் தேவனுடைய வரத்தை விசுவாசத்தினுலல்ல, யோக்கியதையால் பெற்றுக்கொள்ளத் தேடினுன். ஆளையல்ல வல்லமையை நாடினுன். அவன் அதைத் தன்னயத்துக்கும், மனிதர் புகழ்ச்

சிக்கும் தேடினுனேயன்றி வழியத்திற்காகத் தேடவில்லே. தேவனுக்கு முன்பாக அவனுடைய இருதயம் செம்மையற்றிருந்தது. ஆனதால் அவன் வல்லமைபெறவில்லே. பாவ உணர்ச்சியான் மனஸ்தாபமும் விசுவாசமுமே ஒரே ராஜபாதை. பாவமனஸ்தாபத்தையும் விசுவாசத்தினுலாகும் பூரண ஒப்புக்கொடுத்தலேயும் கிரயமாகக்கொடுத்து தனித்தாள் வேலேயால் மனிதருக்குத் தேவைக்கே தவங்கு வேனு?

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், கிலேவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னேத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது ரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னேத் தாங்கும்படி செய்யும்.

அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளே உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். சங். 51: 10–13.

VII. நமது சகாயர்

தனித்தாள் வேலேயைப்பற்றி மூன்று திருஷ்டாந்தங்கள். அப். 8: 26–38 ; 9 : 1–17 ; 10 : 1–5, 9, 15, 20, 33, 43–45.

பிலிப்பும் எத்தியோப்பியனும். அப். 8 : 26–28.

இச்சம்பாஷணேக்குப் பிலிப்பு நடத்தப்பட்டதெப்படி? தேவன் இன்றைக்கும் நம்மை நடத்துகிறூரா? எத்தியோப்பியன் ஆயத்தமாக்கப்பட்டது எவ்விதம்? நம்மைச் சூழவும் இப்படி ஆயத்தமாக்கப்பட்ட மனிதர்கள் இருக்கிறூர்களா? மற்றவர்கள் அவர்களுக்கு உதவி செய்தாலன்றி தாங்களே (இரட்சிப்பை) அறிந்துகொள்ளக்கூடியவர்களல்லாதவர்களே.

எப்படிப்பட்ட இருதயங்களில் தேவாவி கிரியை செய்கிறூர்? யாருக்குள் அவர் கிரியை செய்கிறதில்லே?

அனனியாவும் சவுலும். அப். 9 : 1–21.

சவுல் எப்படி ஆயத்தமாக்கப்பட்டான்? நியாயப்பிரமாணத்தின் கீழ்ப்பட்ட அவனுடைய அனுபவமென்ன? ரோ. 7 : 14, 15. அனனியா நடத்தப்பட்ட வகையெது? அவன் அதற்கெப்படி யிணங்கினுன்? இந்தச் சம்பாஷணேயில் சம்பந்தப்பட்ட மூன்று ஆட்கள் யார்? அப். 9 : 17.

பேதுருவும் கோர்னேலியுவும். அப். 10 : 1–5.

இந்த கிறிஸ்தவனல்லாத உத்தியோகஸ்தனுக்குள் தேவன் செய்த ஆயத்தத்துக்கு என்ன ரூபகாரத்தை நாம் காண்கிறேம்? நம்மைச்

சூழவும் அப்படிப்பட்ட கிறிஸ்தவரல்லாதவர்கள் இன்றைக்கும் இல்லையா? பேதுரு எவ்விதமாய் தேவனுல் ஆயத்தமாக்கப்பட்டான்? இந்தச் சம்பாஷணையில் சம்பந்தப்பட்ட மூன்று ஆட்கள் யார்? 10: 4.

இந்த மூன்று சம்பாஷணைகளிலுமுள்ள அந்தராங்கக்காட்சியைக் காணும்படி நமக்கிடங்கிடைத்திருக்கிறது. தேவன் கிறிஸ்துவின்மூலமாய்த் தமதாவியைக்கொண்டு கிரியைசெய்து ஊழியனைப் பக்குவப்படுத்தி நடத்துகிறார்; கிறிஸ்தவனல்லாதவனையும் உணர்த்தி பக்குவப்படுத்தி யிழுத்துக்கொள்ளுகிறார்.

மேற்காட்டிய ஒவ்வொன்றிலும் பாவவுணர்ச்சியையும், மனந்திரும்புதலையும், ஞானஸ்நானத்தால் பரிசுத்த அறிக்கைசெய்ய ஏவப்படுதலையும், உடனே ஊழியஞ்செய்யப்புகுதலையும் காண்கிறோம்.

காரிருண்ட இரவில் சினேகிதன். லூக். 11: 5–13.

பரிசுத்தாவியானவர் நமக்குச் சகாயம் செய்யத் தயாராயிருக்கிறார். நாமே சாட்சிகள். அவர் நியாயவாதி (Advocate). பிதாவானவர் நமக்கருளாலவாயிருக்கிற அவரது வாக்குத்தத்தத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்வேனு? கட்டளையை நிறைவேற்றுவேனு? அப். 1: 8. போக்குச் சொல்லாமல், கடத்திவைக்காமல் அல்லது தாமதியாமலே இன்றைக்கே சாட்சியும் பகர்வேனு?

VIII. பிரபோதம்

1. தனித்தாள் சுவிசேஷ வேலையானது சுயேச்சையானதும் விசித்திரக்கட்டானதுமான ஒழுங்குக்குரிய வேலையல்லவென்றும் ஜீவியத்திலிருந்துண்டாகிற விலக்கற்காரிய இயற்கையான ஒழுங்குக்குரியதென்றும் முன்னுடியே யறிந்துகொள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இது விளங்கும். எப்படியெனில், சகல நாகரீகமும், தத்துவஞானமும், மானிடத்தோச்சியும் ஒரு பொதுப்பிரமாணத்தின்மேல் அஸ்திவாரம்போட்டிருக்கின்றன. சலாக்கியங்களையும் புதிய நூதனகாரியங்களையும் சர்வஜன சுதந்தரமாக்குவதே அப்பிரமாணமாம். இதினுல் மனிதர் தங்கள் ஜீவியத்தைப்பற்றி ஒரு புதிய மதிப்பை யுடையவர்களானுர்கள். இதற்கெல்லாம் மூலமென்னவென்றுல் தனித்தாள் சாட்சியே. ஒரு நல்ல புஸ்தகத்தை, ஒரு உபாத்தியாயரை, ஒரு ஒழுங்குமுறையைப்பற்றி ஒரு சிநேகிதனுக்குச் சிபாரிசுபண்ண நாம் பின்வாங்குகிறதில்லை. என்றாலும் இந்த ஒப்பற்ற நற்செய்தியின் மகத்தான பாகத்தைச் சொல்லக்கூடாத அதர்மக்கோழைகளாய் நாமேன் இருக்கவேண்டும்? அல்லது நமது சிநேகிதரை மனிதஜாதியின் உத்தம சிநேகிதனிடத்தில் அழைத்துவருகிறதற்கு நாமேன் வெட்கப்படவேண்டும்?

2. நீ போதுமான அறிவடையும்பரியந்தம் இந்த வேலையைத் தவங்கும்படி காத்திராதே. உன்னறிவு இத்தணையென்பதின்மேல் இவ்வேலை சார்ந்திராமல் கிறிஸ்து இத்தகையரென்பதின்மேலேயே சார்ந்திருக்கிறது. நீ அவரிடத்தில் என்னத்தைக் கண்டாயோ அதை மற்றவனுடனே பங்கிட்டுக்கொள்ளும்படி அவனுக்கும் கொடு. உலகத்தை மாற்றவேண்டிய வழி இதுதான். தானுகவே இயற்கையும், மனுஷீகமும், அனுதாபமும், சுயமறப்புமுடையவனுயிரு.

3. கூடுமானுல் தனித்தாள் வேலையைப்பற்றி யேகோபித்துப் படிக்கும்படி ஒரு கூட்டத்தை அல்லது ஒரு வகுப்பை யுண்டாக்கு. அவ்வகுப்பு ஒரே மனமுள்ள கிறிஸ்தவர்களாகவேண்டும். அவர்கள் அப்பொருளை உபதேசத் தர்க்கவாதப் பாடமாக்காமல், அதைக் கிரியானுபவத்துக்குள்ளாக்கும்படி பார்க்கட்டும். மனிதரைக் கிறிஸ்துவுக்குட்படுத்துவதே அந்த ஒரே பொருள். உள்ளபடியே தனித்தாள் வேலை செய்யவும் அதை யுடனே தவங்கவும் திட்டமான நோக்கமில்லாத யாரையும் அந்த வகுப்பில் சேர்க்கவேண்டாம்.

4. வகுப்பை நடத்துவதில் பின்வருமாறு காலவரையறைப் படுத்திக்கொள்ளலாம்.

(1) இவ்வேழு பாடங்களி லொன்றை அரைமணிநேரம் படிக்கலாம்.

(2) மனிதரோடு புழங்கும்போதுண்டாகக்கூடிய சில விசேஷித்த கஷ்டங்கள் அல்லது ஊயப்பாடுகளைப்பற்றி யோசிக்கலாம். அதாவது தேவலுருவர் உண்டு, அவரது பிதாவடைவான குணம், கிறிஸ்துவின் தெய்வீகம் முதலியவைகளே. இதற்கு இருபது நிமிஷம் மாகட்டும்.

(3) தாங்கள் மனிதரைக் கண்டு சம்பாஷித்ததாலான பலனைப் பற்றி வகுப்பார் அறிக்கைசொல்லவும், அடுத்த பாடம், தர்க்கத்துக்குரிய விசேஷித்த பொருள் நியமிப்புக்கும் பத்து நிமிஷம்.

5. மனிதர் இரகசியமாகச் சொன்னதையும் தனிச்சம்பாஷணையில் செய்த அந்தரங்கபாவ அறிக்கைகளையும் வெளிப்படுத்தாமல் நம்பிகைக்குரியதாய்ப் பத்திரப்படுத்துவதில் உறுதிகொள். எந்த மேன்மகனும் அல்லது மெய்க்கிறிஸ்தவனும் மனிதரோடு சகவாசம் செய்யும்போது ஒருவனது அந்தரங்கமான கண்ணிய ரகசியங்களை இன்னுருவனுக்குச் சொல்லான்.

6. பாடம் முடிந்ததும் மனிதரோடு சம்பாஷிக்கையில் இயல்பாயெழும்பக்கூடிய சில வருத்தமான கேள்விகளைப்பற்றிப் பேசலாம். உதாரணமாக, ஒருமார்க்கவிசாரியானவன் தான் கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்பக்கூடாதவனுகவாவது, அவதாரமானவர்களென்றெண்ணப்பட்டவர்களுக்குள்ளே கிறிஸ்துவுக்கு அத்தனை மேன்பாட்டைத் தராதவனுகவாவது காணப்படும் சங்கடம் நேரிடு

கிறதென்று வைத்துக்கொள்வோம். நாம் அந்த மார்க்கவிசாரியான வன் நம்புகிற ஆளைப்பற்றி அல்லது அவதாரத்தைப்பற்றிப் பின்வரும் பரீட்சைக் கேள்விகளை அவனிடம் கேட்போம்.

(i) மனிதர் சகாயஞ்ச நரஜீவனைத் தரித்துக்கொண்ட அந்த மூர்த்தி சரித்திரசாட்சியாய் ரூபிக்கப்பட்ட ஆள்தானு?

(ii) அவர் போதித்தது சத்தியமா? அது மனிதரை உயர்த்தினதா? அது உலகத்துக்கு ஒளி கொடுக்கத்தக்கதா? (தேவன், மனிதன், சன் மார்க்கம், தேவனுடைய இராஜ்யம் முதலியவற்றைப்பற்றி அம்மூர்த் தியின் போதனையென்ன?)

(iii) அம்மூர்த்தியுடைய குணலக்ஷண மென்ன? தேவனை யொத்த குணமா? பாவமின்மையா, நாம் பின்பற்றத்தக்கதா? (அம் மூர்த்திக்கு ஞானம், அன்பு, வல்லமை, பரிசுத்தம், தாழ்மை, மன் னிப்பு முதலிய குணங்களுண்டா?)

(iv) அம்மூர்த்தி தன்னைப்பற்றிப் பேசினதென்ன? (தம்மை தேவனுடைய குமாரனென்றும் உலகரட்சகரென்றும் சொன்ன துண்டா?)

(v) அம்மூர்த்தியின் ஜீவியத்தால் சரித்திரசம்பந்தமாய் உலகத் தில் என்ன பலன் வீளைந்திருக்கிறது? (மனிதர்மேல் ஜாதிகள் கூட் டங்கள்மேல் அவர் செல்வாக்கென்ன? அடிமைத்தனம், குழந்தைப் பருவம், பெண்மைகள், வியாதியஸ்தர், ஏழைகள், அறிவீனர், பாவி கள் ஆகிய இவர்மேல் அவர் சக்தி செல்வாக்கென்ன?)

(vi) அம்மூர்த்தி சர்வலோகத்துக்கும் பொதுவானவரா? ஒரே வுளின் முடிவான வெளிப்படுத்தல் சகல மனிதருக்கும் பொது வாயிருக்கவேண்டும். இந்த வெளிப்படுத்தல் கோத்திரத்துக்கும் ஜாதிக்குமுரியதா யொடுங்கினதா அல்லது உலகத்துக்கே ஒளி யானதா?

(vii) அம்மூர்த்தி நமதனுபவப் பரீட்சைக்கு யோக்கியரா? அவர் நம்மை இரட்சித்து, போனகால, நிகழ்கால, வருங்கால அளவில் நம்மை திருப்திசெய்கிறாரா?

மேற்சொன்ன பரீட்சைகளையெல்லாம் இயேசுவானவர்மேல் பொருத்திப் பார். அப்புறம் அந்த மார்க்கவிசாரிதானே தான் நம்பிக் கொண்டிருக்கிற மூர்த்தியாகிய இரட்சகன் அல்லது அவதாரன் மேலும் பொருத்திப் பார்க்கட்டும். இன்னொருவனுடைய விசுவா சத்தையாவது மார்க்கத்தையாவது எதிர்க்காதே. வெளிச்சத்தைக் காட்டு, இருள் தன்னாலே ஓடும். இந்தவிதமாக முக்கிய கஷ்டமான கேள்விகளை வகுப்புநேரத்தில் இரண்டாம் பாகத்தில் ஆராயலாம்.

7. ஒவ்வொரு சம்பாஷணையிலும் நீ ஒரு சாட்சியாக மாத்திரம் இருக்கிறாயென்றும் தேவன் தாமே முக்கியஸ்தரென்றும் அவர் தாமே தமது ஆவியால் உன்னிருதயத்திலும் உன் வார்த்தைகளைக்

கேட்டுக்கொண்டிருக்கிறவனுடைய இருதயத்திலும் கிரியை செய்கிறதென்று நினை. ஒரு மனிதனை ஆதாயப்படுத்தினால் அதன் மகிமையை தேவனுக்குச் செலுத்து. நீ அதை உண்மைத் தப்பாய் அபகரித்துக்கொள்ளாதே. நீ அப்படிச் செய்தால் உன் பிற்கால ஊழியத்துக்குரிய வல்லமையை இழந்துவிடுவாய்.

8. மார்க்கவிசாரி ஒருவன் விளங்கிக்கொள்ளக்கூடிய சத்தியங்களை மட்டும் அவனுக்குப்புகட்டி அவனைப் படிப்படியாக முன்னேறச் செலுத்து. நீ சொல்ல விரும்பிய காரியங்கள் பல விருக்கலாம், ஆனால் அவை யாவையும் அவன் ஏககாலத்தில் கிரகித்துக்கொள்ளச் சமயலற்றிருப்பான். ஆத்திரப்படுவதால் அவனுக்குள்ளுண்டான சொற்ப வாஞ்சையையும் அழித்துப்போடாதே. உன்னோடு அவன் எவ்வளவு தூரம் ஒத்துவரக்கூடுமென்பதைத் தெரிந்துகொண்டு, அவன் ஏற்றுக்கொண்ட சத்தியவொளியில் நடக்கச் சித்தமாயிருக்கிறானென்று விசாரி. அவன் ஞானஸ்நானம் பெறுவதின் அவசியத்தையும், அதனால் வரும் உபத்திரவமாகிய சிலுவையைச் சுமக்க வேண்டுமென்றும், அவன் கிறிஸ்துவிடம்கொண்ட பக்தி உறுதிப்பட்டு சிலுவைசுமக்கத்தக்க மனோதிடன் தோன்றுமுன், பேசுவது ஞானமல்ல. (மத். 16: 13–38.) கிறிஸ்து தமது சீஷரோடு இவ்வித ஜாக்கிரதையோடுதான் நடந்துகொண்டார். ஆனால் தானிருக்கும் நிலையிலிருந்து ஓரடி (கடைசியடியோ முதலடியோ) நான்தோறும் எடுத்துச்செல்ல அவன் முயலுவது அவசியமென்று நிண்ணயிக்கூறு.

9. ஒவ்வொரு சம்பாஷணையிலும் உன் நோக்கமெல்லாங்கூடி மனிதனோடு தர்க்கித்து அறிவுக்குரிய ஒரு சத்தியத்தை அல்லது ஒரு வேதசாஸ்திரக்கொள்கையை அல்லது ஒரு புஸ்தகத்தின் ரூபகார வாக்கியங்களை அவன் ஏற்றுக்கொள்ளும்படி பண்ணுவதல்ல. ஆனால் இரட்சகரும் சினேகிதருமான இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவபிதாவோடே அவனை ஜீவனுள்ள ஐக்கியத்தினுள் இணைப்பாயினைத்துவிடுவதே. என்றாலும் வேதபுஸ்தகமானது பூர்வகாலத்தில் மனிதர்கள் தேவனைக் கிறிஸ்துவுக்குள் கண்டுபிடித்த அனுபவத்தைக் காட்டும் சாதனமாயிருக்கிறது. அது இன்றைக்கும் நம்மை சகோதர ஐக்கியம், ஊழியமென்பவற்றின் அனுபவத்துக்கு நடத்தக்கூடியதாய் இருக்கிறது.

10. பின்வருவனவற்றை நாம் குறிப்பித்தால் பல வகுப்பான மனிதர்களோடு சம்பந்தப்பட ஆரம்பிப்பவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

உதவியான வாக்கியங்கள்

1. மனிதரை யாதாயப்படுத்த முடியாதென்று பயப்படுகிற ஊழியனுக்கு. மத். 10: 20, 24, 40–42; 28: 18–20; மாற். 8: 34–38; அப். 1: 8; லூக். 11: 5–13; எரே. 1: 6–9, 18–19; ஏசா. 50:4–10.

2. சமுசயப்பட்ட மனிதன். யோ. 7: 17; 5: 44; மத். 5: 1-7, 29; யோ. 14: 1-17: 26.

3. நிர்விசாரி. மத். 22: 37-38; ரோ. 1: 28; 3: 23; 6: 23; வெளி. 3: 15-20; ஏசா. 53: 6.

4. மன்னிப்படையேனென்ற வுணர்வுடையவன். யோ. 3: 16; 19: 10; 1 யோ. 1: 7-9; 1 தீமோ. 1: 15; ரோ. 5: 8; 10: 9, 10; ஏசா. 1: 18; 44: 22.

5. நிலத்திருப்பேனெவென்றஞ்சுகிறவன். யோ. 10: 28, ? ரோ. 8: 35-37; 1 பேது. 1: 5; 2 தீமோ. 1: 12; யூதா. ? எபி. 7: 25; சங். 23: 1.

6. உலகத்தையும் பாவத்தையும் நேசிக்கிறவன். மாற். 8: 36; மத். 6: 19-21, 31-33; லூக். 14: 27.

7. இரட்சகர் அவசியமில்லையென்னும் சுயநீதிக்காரன். மத். 5: 20; லூக். 18: 9-14; ஏசா. 53: 6; 64: 6; 1 பேது. 2: 24.

8. பிரங்க அறிக்கையும் ஞானஸ்நானமும் அவசியமில்லை யென்பவன். மத். 10: 32; 28: 18-20; மாற். 8: 34-38; லூக். 9: 36; 11: 23, 28, 33; 14: 25-32; அப். 2: 38-39; ரோ. 10: 9, 10.

IX. பாடானுபந்தம்

தனித்தாள் சுவிசேஷ வேலைக்கு இன்னும் வேண்டிய பாடமாகப் பிரசங்கவாக்கியங்களைக் கவனிக்கலாம்.

(1) சுயஞானப்புக்கஞ்சிப் பின்வாங்கினவன். மாற். 10: 17-22.
(2) மனிதருக்கஞ்சிய தலைவன். யோ. 3: 1-16.
(3) யேசுவையுபசரித்த தள்ளாண்டகுலத்தான். லூக். 19: 1-10.
(4) ஒளிகண்ட கபோதி. யோ. 9: 1-7, 25, 35-41.
(5) சுயநீதிப் பரிசேயன். லூக். 7: 36-50.
(6) சிநேகிதரால் கொண்டுவரப்பட்ட சக்தியற்ற மனிதன். மாற். 2: 1-12.
(7) அன்பின் நேசன். லூக். 10: 38-42.
(8) மறுபடியுமுண்டாக்கப்பட்ட மனிதன். அப். 3: 1-9.
(9) கூணப்பொழுதில் குணப்படல். அப். 16: 19-34.
(10) மாதிரி யூழியன். அப். 20: 17-38.
(11) இடைவிடாச் சாட்சி. அப். 28: 23-31; பிலிப். 1: 12-14.
(12) விடுதலைபெற்ற [illegible] பிலமோ. 1: 1-25.

C. L. S. PRESS, MADRAS—1915
22485